கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (மார்ச்/ஏப்ரல் 2019)

## SAS 2143 Sociology of Poverty

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இலிருந்து இரு வினாக்களிற்கும் பகுதி–II இல் இலிருந்து மூன்று வினாக்களிற்கும் மொத்தமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

### பகுதி – I

01. (அ) வறுமை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக?

(08 புள்ளிகள்)

(ஆ) வறுமையினை விளக்குவதில் கினி குணகம் (Gini Cofficient) பற்றி தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

02. (அ) பூரண வறுமை தொடர்பில் (absolute poverty) விளக்குக?

(08 புள்ளிகள்)

(ஆ) லோறன்ஸ் வளையியை (Lorance Curve) வரைந்து அதில் குறிப்பிடப்படும் விடயங்களைத் தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

03. (அ) சார்பு வறுமை (Relative Poverty) என்னும் எண்ணக்கரு பற்றித் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) "யுத்தமும் வறுமையும்" இருபக்கத் தொடர்பு கொண்டவை - இக்கூற்றின் பொருத்தப்பாடு பற்றி எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

### பகுதி – II

04. வறுமை பற்றி பேசம் அறிஞர்களில் சிலர் குறிப்பிடுகையில் "வறுமையானவர்களே அவர்களது வறுமை நிலைக்குக் காரணமாகின்றனர்" என்கின்றனர். இதனை நீர் ஒரு விமர்சனவியலாளராக கருதிக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

05. அண்மையில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வறியவர்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு சில முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு சமூகவியலாளராக நீர் அவற்றை எவ்வாறு பார்க்கின்றீர் என்பதனை ஆதாரங்களின் துணையுடன் அலசி ஆராய்க.

(20 புள்ளிகள்)

(ம.ப.பா)

06. பாரபட்சப்படுத்தல்கள் (Discriminations) வறுமைக்குக் காரணமா அமையுமாற்றினை, பால்நிலை சார்ந்த உமது புரிதலின் அடிப்படையி தக்க எடுத்துக்காட்டுக்களின் துணையுடன் நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்

07. "இலங்கையில் காலனித்துவ காலம் தொடக்கம் இற்றைவரையிலு பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சி திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு வெற்றியடைந்தபோதிலு வறுமையானவர்களின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடையவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் காணப்படுகின்றன." லக்ஸ்மன் யாப்பாவி கருத்துக்களின் துணையுடன் உமது கருத்துக்களையும் இணைத்து பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்

*****